டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 169 - Madurai | Online Edition

# மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் துறையில் திறன் மேம்பாட்டிற்கு மீன்வளத் துறையின் உத்வேக முயற்சி

புது தில்லி, ஜன.10

மீன்வள மதிப்புத் தொடரை நவீனமாக்குதல், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல் மற்றும் மனித வளம் மற்றும் நிறுவனத் திறனை மேம்படுத்துவதன் மூலம் சந்தைப்படுத்தல் இணைப்புகளை நிறுவுதல் ஆகியவற்றிற்கு திறன் மேம்பாடு மற்றும் திறன் கட்டமைப்பை முக்கியமானதாக பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் வலியுறுத்துகிறது.

குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பயிற்சி வகுப்புகள், கற்றல் பயணம், பயிலரங்குகள், மாநாடுகள், பயிற்சியாளர்களுக்கான பயிற்சி போன்றவை பயிற்சித் திட்டங்களில் அடங்கும். இவை பங்கேற்பாளர்களுக்கு அந்தந்தத் தொழில் செயல்பாடுகள் மற்றும் செயல்திறன் தேவைகளுக்கு ஏற்ப தேவையான அறிவையும் திறன்களையும் வழங்குகின்றன.

இதற்காக, பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதமரின் மீன்வளர்ப்பு விவசாயிகள் வளக் கூட்டுறவு திட்டத்தின் கீழ் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒருங்கிணைப்பு அமலாக்க நிறுவனமான ஐதராபாதில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு மத்திய அரசின் மீன்வளத் துறை ரூ.2.93 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்பு விவசாயிகளின் பயிற்சிக்கான அனைத்து செலவுகளையும் மீன்வளத் துறை ஏற்கிறது.

கடந்த ஆறு மாதங்களில் மொத்தம் 499 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு மொத்தம் 22,921 பங்கேற்பாளர்கள் பயனடைந்தனர். பங்கேற்பாளர்களை நவீன நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களுடன் தயார் செய்வதன் மூலம், பிரதமரின் மீன்வள

மேம்பாட்டுத் திட்டம் தொடர்ந்து மீன் வளர்ப்பு விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் மீன்வளத்துடன் தொடர்புடைய சமூகங்களை மேம்படுத்தி, உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து நல்வாழ்வு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டை உறுதி செய்கிறது.

மீன்வளத் துறை தலைமையிலான இந்த முயற்சி, பங்குதாரர் களுக்கு அதிகாரம் அளித்தது மட்டுமின்றி, மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கும் மீள்தன்மைக்கும் வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது.

# விவசாயிகளுக்கு ட்ரோன் செயல்முறை விளக்கம் அளித்த தோட்டக்கலை கல்லூரி மாணவிகள்



பெரம்பலூர், ஜன.10

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் விவசாயிகளுக்காக ட்ரோன் மூலம் பூச்சிக்கொல்லி மற்றும் மருந்துத் தெளிப்பு தொடர்பான செயல்முறை விளக்க காட்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது, விவசாயத்தில் ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் முக்கிய நன்மைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. குறிப்பாக, குறைந்த தொழிலாளர் தேவை, குறுகிய நேரத்தில் அதிக பரப்பளவில் மருந்துத் தெளிப்பு செய்யும் திறன், பயிர்களில் சமச்சீரான தெளிப்பு, மருந்து தெளிக்கும் நபர்களுக்கு ரசாயன பாதிப்பு குறைவது, மேலும் உயரமான மற்றும் அடர்த்தியான பயிர்களுக்கு தெளிப்பு மிகவும் ஏற்றது என்பன எடுத்துரைக்கப்பட்டன.

இந்த ட்ரோன் தெளிப்பு விளக்கக் காட்சி விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததுடன், நவீன தொழில்நுட்பங்களை விவசாயத்தில் ஏற்றுக் கொள்ளும் ஆர்வத்தையும் அதிகரித்தது. இத்தகைய முயற்சிகள் எதிர்காலத்தில் பாதுகாப்பான, நிலையான மற்றும் நவீன விவசாயத்திற்கு வழிவகுக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருச்சி தோட்டக்கலை மாணவிகள் ஆர்யா பிஜு, கௌரி.செ, ஜெசிகா, ஜிவா.சொ, கீர்த்தனா.ச, மோனிக்கா.து, மோத்திகா.ரா, யாழினி.செ ஆகியோர் செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெல்லின் ஈரப்பதம் அறிந்து சேமித்தல் வேண்டும்!

சிவகங்கை, ஜன.10

சிவகங்கை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் விவசாயப் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது நெல் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பல பகுதிகளில் நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளன. நெல் அறுவடைக்குப் பின்னர் சரியான ஈரப்பத நிலையில் சேமிப்பு செய்யப்படாத பட்சத்தில், பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு நெல் மணிகள் உள்ளாக நேரிடும். இதனால் நெல்லின் தரம் குறைந்து, விவசாயிகள் நல்ல விலைக்கு விளைபொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே, அறுவடை செய்யப்பட்ட நெல்மணிகளை நன்கு உலர்த்தி, சுத்தம் செய்து, 13% அல்லது அதற்கும் குறைவான ஈரப்பதம் உள்ள நிலையில்மட்டுமே சேமிப்பு செய்ய வேண்டும். இவ்வாறு சரியான ஈரப்பதத்தில் சேமிப்பு செய்தால், நெல்லை நீண்ட நாட்கள் பூச்சி மற்றும் நோய் பாதிப்பின்றி பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

மேலும், நெல்மணிகளின் ஈரப்பத நிலையைத் துல்லியமாக அறிந்து கொள்ள, சிவகங்கை, தொண்டிசாலையில் அமைந்து உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- செலுத்தி ஈரப்பத பரிசோதனை செய்து கொள்ளலாம். இதன் மூலம் அறுவடைக்குபின் ஏற்படும் இழப்புகளை குறைத்து, நல்ல தரமான நெல்லை உயர்ந்த விலையில் விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறமுடியும். எனவே, அனைத்து விவசாயி களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, அறுவடை பிந்தைய இழப்புகளை குறைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

இத்தகவலை,சி.சிவகாமி, விதைப்பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், மதுரை மற்றும் ச.பாலகணபதி, வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், சிவகங்கை தெரிவித்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இப்கோ வயல் விழா



திருச்சி, ஜன.10

திருச்சி மாவட்டம், இருங்கலூர் கிராமத்தில் விவசாயிகள் பங்கேற்புடன் வயல் விழா நடைபெற்றது. இவ்விழாவின் நோக்கம், மக்காச்சோளத்தில் நவீன நானோ உர மேலாண்மை முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இந்த நிகழ்ச்சியில் இருங்கலூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ஞான சேகரன், செயலாளர் கோவிந்தராஜன் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுடன் கலந் துரையாடி, சமநிலை உரப்பயன்பாடு மற்றும் நவீன தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்ள ஊக்குவித்தனர்.

இவ்விழாவில், முன்னோடி விவசாயியான டி.ஜேசுராஜ், தனது மக்காச்சோளம் பயிரில் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா ஆகியவற்றை 500 மில்லி அளவில் இலைத்தெளிப்பாக பயன்படுத்திய அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். இதன் மூலம் பயிர் வளர்ச்சி, தண்டுவலிமை மற்றும் பயிர் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். மக்காச்சோளம் வயலில் காணப்பட்ட நேர்மறையான விளைவுகள் மற்ற விவசாயிகளுடன் பகிரப்பட்டதால், நானோ உரங்களின் பயன் தன்மை குறித்து நல்ல விழிப்புணர்வும் நம்பிக்கையும் உருவானது. நிகழ்ச்சியின் போது இப்கோ கள அதிகாரி பொம்மண்ணன், மண் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் சமநிலை உரப் பயன்பாடு, உரங்களை திறம்படவும் ஒரே மாதிரியாகவும் தெளிக்க ட்ரோன் தொழில்நுட்பத்தின் பங்கு, விவசாயிகளின் பாதுகாப்பிற்கான சங்கட் ஹரன் பீமா யோஜனா காப்பீட்டு திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த வயல்விழா, விவசாயிகள் நவீன வேளாண் உள்ளீடுகள் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிக்க உதவும் என்ற நம்பிக்கையுடன் நிறைவடைந்தது.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட வம்பன் உளுந்து இரகங்களில் விதை உற்பத்தி வயல் விழா

விருதுநகர், ஜன.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையம், வம்பன் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை இணைந்து விளாத்திகுளம் படர்ந்தபுளி கிராமத்தில், ஜனவரி 8-ஆம் தேதி, வம்பன் உளுந்து இரகங்களில் விதை உற்பத்தி வயல்விழா, விவசாயிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. இச்சமயத்தில் பயறுவகைப் பயிர்கள் பூக்கும் மற்றும் காய்க்கும் தருவாயில் இருந்தது. இவ்விழாவில் முனைவர் கி.தியாகு, உதவி பேராசிரியர், வரவேற்புரை வழங்கினார். வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சுப.மாரிமுத்து தொடக்கவுரை வழங்கி பயறுவகைப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் விதை உற்பத்தியில் கூடுதல் வருமானம் பெறுவது பற்றி எடுத்துரைத்தார். அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வி ரமேஷ், தலைமையுரை ஆற்றி பயறுவகைப் பயிர்களில் உழவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு தொடர்ந்து வழஙகப்பட்டு வரும் பயறுவகைப் பயிர்களுக்கான பயிற்சிகள் பற்றி விளக்கிக் கூறினார். தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மனோரஞ்சிதம், சிறப்புரை வழங்கி பயறுவகைப் பயிர்கள் சார்ந்த அரசுத் திட்டங்கள் குறித்து எடுத்துரைதார். விளாத்திகுளம் வேளாண்மை உதவி இயக்குநர் குமரன் மற்றும் விதை சான்றளிப்பு அலுவலர் பாலமுருகன் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கி அரசு நிறுவனங்களில் உற்பத்தி செய்த சான்று விதைகளை பயன்படுத்த அறிவுறுத்தினார்கள்.

வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்திலிருந்து உளுந்து பயிரில் கடந்த 50 ஆண்டுகளில் 12 இரகங்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. தற்போது வம்பன் 8, வம்பன் 9, வம்பன் 10 மற்றும் வம்பன் 11 ஆகிய இரகங்கள் விதை விநியோக சங்கிலியில் இருக்கிறது. கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட வம்பன் 12 இரகம் 2026-ல் வல்லுநர் விதை உற்பத்தி செய்யப்பட்டு கூடிய விரைவில் விதை விநியோக சங்கிலியில் கிடைக்கச் செய்யப்படும்.

இவற்றில் வம்பன் 8 மற்றும் வம்பன் 11 ஆகிய இரு இரகங்களும் அனைத்துப் பருவங்களிலும் பயிரிட ஏற்றது. வம்பன் 10 ராபி பருவத்திற்கும் (புரட்டாசி), வம்பன் 9 நெல் தரிசு (மார்கழி – தை) பருவத்திற்கும் ஏற்றது. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 3.5 லட்சம் எக்டரில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டு 1.8 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் மகசூல் ஒரு எக்டருக்கு சராசரியாக 500 – 600 கிலோ என்ற அளவில் கிடைக்கிறது.

இவற்றில் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 62,500 எக்டர் பரப்பளவில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக ராபி பருவத்தில் மட்டும் மானாவாரியில் 60 ஆயிரம் எக்டரில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டு 15,000 டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையம், மதுரை மற்றும் அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையங்கள் ஒவ்வொரு வருடமும் ராபி பருவத்தில் மட்டும் 1000 ஏக்கர் பரப்பளவில் விதை உற்பத்திக்காக பயிரிட்டு 300 டன் விதை உற்பத்தி செய்கின்றனர். இவ்விதைகள் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில விவசாயிகளுக்கு பெருமளவில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

வெள்ளரிப்பட்டி விதை உற்பத்தி விவசாயிகள் கருப்பசாமி மற்றும் ஞானபிரகாசம் ஆகியோர் உளுந்து வம்பன் 11 இரகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக விதை உற்பத்தி மேற்கொண்டதில் மஞ்சள் தேமல் நோய் தாக்குதல் இல்லாமலும், அதிக காய்கள் எண்ணிக்கை கொண்டதாகவும் மற்றும் மகசூல் அதிகரித்து குவிண்டாலுக்கு ரூ.3000-க்கும் அதிகமாக கிடைத்தது என தங்களுடைய வெற்றி அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இவ்விழாவில் 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இறுதியாக முனைவர் வேணுதேவன், உதவி பேராசிரியர் நன்றியுரை ஆற்றினார்.



# வேளாண் துறையின் உழவரைத் தேடி வேளாண்மை திட்டம்



திருச்சி, ஜன.10

திருச்சி மாவட்டம், தாளக்குடி கிராமத்தில் விவசாயிகளை அவர்களுடைய கிராமங்களுக்கே தேடிச் சென்று வேளாண் விரிவாக்க சேவைகளையும், அரசின் திட்டங்களையும் நேரடியாக வழங்கும் தமிழ்நாடு அரசின் உழவரைத் தேடி வேளாண்மை – உழவர் நலத்துறை திட்டம் வாரம் இருமுறை நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி திருச்சி மாவட்டம், தாளக்குடி கிராமத்தில் உழவரை தேடி வேளாண்மை உழவர் நலத்துறை முகாம் நடைபெற்றது. இதில் வேளாண்மை உதவி இயக்குநர் சத்திய பிரியா, விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும் அரசு மானிய திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள், பயறுவகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை, திரவ வரிலான உயிர் உரங்கள் மானிய விலையில் பெற்றுக்கொள்ள கேட்டுக் கொண்டார். மேலும் நடப்பு சம்பா பருவ நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் மற்றும் அதனை நிவர்த்தி செய்யும் முறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் அய்யாசாமி நெல் நுண்ணூட்டம் இடுதல் பற்றி விளக்கி கூறினார். வேளாண்மை உதவி அலுவலர் ராஜசேகரன் பேசுகையில் வாளாடி துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இடு பொருட்கள் மானிய விலையில் பெற்று பயன் பெற்றிட கேட்டுக் கொண்டார். உளுந்து ஆகியவற்றின் விதை இருப்பு நிலவரம், மண்புழு உரம் தயாரிப்பு, நொச்சி, வேம்பு மரக்கன்றுகள் மனியம் வழங்குதல் குறித்தும் கூறினார். இந்நிகழ்வில் விவசாயிகளின் குறைகளைக் கேட்டறியப் பட்டது. மேலும், விவசாயிகளுக்கு தோட்டக்கலை சார்பில் மானியத் திட்டத்தில் காய்கறி விதை தொகுப்புகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் கல்லூரி இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் அகமது இஸ்மாயில், தருண், அன்பு செல்வன்,

அருண்குமார், பிரான்சிஸ் சேவியர், அர்ச்சுதன், தனுஷ் ராஜ், பாலாஜி, தரணி, கோகுல் ஆகியவேளாண் கல்லூரி மாணவர்கள் பஞ்சகாவியா தயாரித்தல், இஞ்சி பூண்டு மிளகாய் கரைசல் தயாரித்தல் பற்றிய செயல்வடிவமாக செய்து காண்பித்து தங்களது ஊரக வேளாண் அனுபவ திட்டம் துவக்க விழா நடத்தினார்கள். அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் பேசுகையில் விவசாயிகள் பயிற்சி கண்டுணர்வு சுற்றுலா செயல் விளக்க திடல் அமைத்தல் ஆகியவற்றை பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

முகாமில் தாளக்குடி விவசாயிகள் அனைவருக்கும் தொழில்நுட்ப கையேடு மற்றும் தொழில்நுட்ப காலண்டர் வழங்கப்பட்டது.

# விதை நெல் தேர்வு முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்



தஞ்சாவூர், ஜன.10

தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் பகுதியில், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் பொது மக்களுக்கு விதை நெல் தேர்வு முறையை செய்து காட்டினர். இதில் அவர்கள் கூறியதாவது, நல்ல நெல் விதைகளை தேர்வு செய்து விதைத்தால் விளைச்சலை அதிகப்படுத்தலாம். நல்ல நெல் விதைகளை கண்டுபிடிக்க ஒரு முறை உள்ளது. அதற்கு பெயர் முட்டை மிதப்பு முறை. ஒரு வாளியில் 10 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் கல் உப்பு ஒரு கிலோ சேர்க்க வேண்டும். பிறகு முட்டை ஒன்றை தண்ணீரில் விட வேண்டும். அப்பொழுது 25 பைசா அளவு மாதிரி முட்டையில் மேல் பாதி தண்ணீரில் மேல் பகுதியில் தெரியும். இது நீரின் சரியான பதத்தை எடுத்துரைக்கிறது. பின்னர் முட்டையை நீக்கிவிட்டு நெல் விதைகளை நீரில் இட வேண்டும். அப்பொழுது சில நெல் விதைகள் மேலே மிதக்கும், அது பதரான நெல் விதைகளை குறிக்கிறது. கீழே தங்கி உள்ள நெல் விதைகள் நல்ல நெல் விதைகள். எனவே அந்நெல் விதைகளை தேர்வு செய்து விதைக்க வேண்டும் என செயல்முறை முலமும் துண்டு பிரசுரம் வழங்கியும் மாணவிகள் விளக்கினர்.

# நெல் பயிரின் வளர்ச்சியில் அசோஸ்பிரில்லம் உயிர் உரத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




சிவகங்கை, ஜன.10

ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, நெல் பயிரில் அசோஸ் பிரில்லம் (Azospirillum) உயிர் உரம் பயன்பாடு குறித்த செயல்விளக்கம் 07.01.26 அன்று சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், கிழவயல் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த செயல்விளக்க நிகழ்ச்சியை செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த 4ஆம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சியின் ஒரு பகுதியாக நடத்தினர். நிகழ்ச்சியின் போது, நெல் பயிரின் வளர்ச்சியில் அசோஸ்பிரில்லம் உயிர் உரத்தின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் மற்றும் மகசூல் உயர்வில் அதன் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது. மேலும், அசோஸ்பிரில்லம் உயிர் உரத்தை விதை நேர்த்தி செய்வது, நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் பயன்படுத்தும் சரியான அளவு, பயன்படுத்த வேண்டிய காலம் மற்றும் முறைகள் குறித்து நடைமுறையில் செய்து காட்டப் பட்டது.

அசோஸ்பிரில்லம் பயன்பாட்டால் நைட்ரஜன் உரத் தேவையை குறைக்க முடியும் என்றும், மண்ணின் வளம் மேம்பட்டு பயிர் வளர்ச்சி சீராக இருக்கும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. இந்த செயல்விளக்கம் சுற்றுச்சூழல் நட்பு மற்றும் குறைந்த செலவில் நீடித்த வேளாண்மை முறையாக இருப்பதால், இரசாயன உரங்களின் அதிகப்படியான பயன்பாட்டை குறைக்க முடியும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மறந்து போன பழைய சோறு மீண்டும் பிரபலமாகிறது? எப்படி?



பழைய கஞ்சி அல்லது பழைய சோறு என்பது முந்தைய நாள் சாதத்தில் தண்ணீரை ஊற்றி மறுநாள் உண்ணும் உணவாகும். சோறு வீணாகுவதை தடுக்க நம்முடைய முன்னோர்கள் செய்து வந்த மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக பழைய சோறு உள்ளது. இதனை 'பழைய கஞ்சி என்றும் ஆங்கிலத்தில் (FERMENTED RICE) என்றும் (SOAKED RICE) என்றும் அழைக்கப்படுகிறது. இது விவசாயிகள், பாட்டாளிகள், அடித்தட்டு மக்களின் காலை உணவாக இருந்து வந்தது.

அப்படிப்பட்ட பழைய சோறு பிற்காலங்களில் 'கிராமத்துக் காரர்களின் சாப்பாடு' என வகைப்படுத்தப்பட்டது. நாகரிக உலகில் காலை டிபனாக இட்லி, தோசை, பூரி என விதவித மான உணவை உட்கொண்டு இன்றைய தலைமுறையினர் நாற்பது வயதிலேயே ஆராக்கியத்தை இழந்து பல்வேறு நோய் களுடன் வாழ்ந்து வருவதை நாம் கண்ணாலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட வேளையில் நாம் கைவிட்ட பழைய சோறு மீண்டும் பிரபலமாகி நட்சத்திர விடுதிகள், ரிசார்ட்களில் காலை உணவாக வலம் வருகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிற தல்லவா?

**பழைய சோற்றின் மகிமை ?**

இன்றைய காலகட்டத்தில் அலோபதி மருத்துவர்கள் கூட பரிந்துரைக்கப்பட்ட உணவாக உள்ளது. ஒரு காலத்தில் பழைய சோறு சாப்பிட்டால் நீரழிவு நோய் (SUGAR) வந்துவிடும் என தவறான அச்சத்தால் கோதுமை உணவுகள் ஓட்ஸ் வகைகளை காலை உணவாக எடுத்து கொண்டனர்.

சென்னை ஸ்டான்லி மருத்துவ கல்லூரி ஆராய்ச்சியின் முடிவில் நீரழிவு நோய்க்கு அருமருந்தாக அதிக நார்சத்து உணவாக பழைய சோறு உள்ளதாக தரவுகள் கூறுகின்றன. பழைய சோற்றில் உருவாகும் பாக்டீரியாக்கள், (PRO BIOTICS) குடலின் உட்புற சுவர்களை (MUCAS LAYER) அரிப்பு ஏற்படாமல் தடுக்க

உதவுகின்றது. உடல் பருமன் ஏற்படாமல் தடுப்பதுடன் கர்ப் பிணிகள் குறை பிரசவம் ஏற்படுவதை தடுக்கிறது. தொடர்ந்து பழைய சோற்றை உண்டால் இரும்பு சத்து பாதிப்பு நிவர்த்தி செய்யப்படுகிறது. கர்ப்ப கால நீரழிவு, இரத்த அழுத்தம் வாரமல் தடுக்க உதவுகிறது.

**பழைய சோற்றில் இரும்பு சத்து எத்தனை சதவீதமாக உள்ளது தெரியுமா?**

100 கிராம் அரிசி சோற்றில் ஊற வைக்கும் முன்பு 3.4 கிராமாக இருந்த சோறு, ஊற வைத்த பின் மறுநாள் 73.91 கிராம் அளவுக்கு இரும்பு சத்து (IRON) கூடுதலாக உள்ளது என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்லாமல் பழைய சோற்றை தொடர்ச்சியாக 55 நோயாளிகளுக்கு காலை உணவாக கொடுத்த பிறகு 13% அந்த நோயின் அறிகுறியே இல்லாமல் போய்விட்டது. மற்றவர்களுக்கு நோயின் தன்மை 9% குறைந்த விட்டதாக தரவுகள் உள்ளன.

**பழைய சோற்றை பல பெயர்களில் பல மாநிலங்களில் அழைக்கும்படி உள்ளது. அவை என்னென்ன தெரியுமா?**

தமிழில் பழையசோறு, கஞ்சி எனவும், கேரளவில் பழங் கஞ்சி எனவும், கர்நாடகவில் ‘தங்கலன்னா‘ எனவும், ஆந்திராவில் ‘சத்தன்னம்‘ எனவும் ஓடிசாவில் ‘பகலா‘ எனவும், மேற்கு வங்கத்தில் ‘பந்தாபட்‘ எனவும் அழைக்கப்படுகின்றன.

**பழைய சோற்றை பற்றி திரைப்பட பாடல் எது தெரியுமா?**

‘பழைய சோறு பச்சை மிளகாய்
பக்கத்து வீட்டு குழம்பு வாசம்‘

**பழைய சோற்றை உண்டால் என்னென்ன நோய்கள் வராமல் தடுக்கலாம்?**

மலச்சிக்கல், பித்தபை கற்கள், வயிற்று உபாதைகள் போன்றவைகளுக்கு அருமருந்தாக உள்ளது என குடல் இரைப்பை அறுவை சிகிச்சை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். சுருக்கமாக சொல்ல போனால் பழைய சோறு பல நோய்கள் வாரமல் தடுக்கும் சோறு, வந்தாலும் அதனை குணமாக்கும் சோறு. அப்படிபட்ட சோற்றை இனிமேலாவது காலை டிபனாக உட்கொண்டு ஆரோக்கியமாக வாழ்வோம். நம்முடைய முன் னோர்கள் உண்ட பழைய சோற்றை உண்டு நலமாக வாழ்வோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஆவின் கூட்டுறவு பால் சங்கத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்




பெரம்பலூர், ஜன.10

பெரம்பலூர் மாவட்டம், நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள், தங்களது கல்வி பயிற்சியின் ஒரு பகுதியாக, எசனை கிராமத்தில் செயல்பட்டு வரும் ஆவின் கூட்டுறவு பால் சங்கத்தை பார்வையிட்டனர். இந்த பயிற்சி பயணத்தின் போது, பால் உற்பத்திாளர் களிடமிருந்து பால் சேகரிக்கும் முறை, பால் தர பரிசோதனை, குளிரூட்டும் வசதிகள், பால் சேமிப்பு மற்றும் விநியோக செயல்முறைகள் குறித்து சங்க அலுவலர்கள் மாணவிகளுக்கு விரிவாக விளக்கினர்.

மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை, அரசு மானியங்கள், பால் மாசுபாடு ஏற்படாமல் தடுக்கும் பாதுகாப்பு முறைகள், பால் குளிரூட்டும் தொட்டிகளின் செயல்பாடு, தர நிலையை பாதுகாக்கும் தொழில்நுட்பங்கள் ஆவின் நிறுவனத்தின் பங்கு மற்றும் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவு பால் சங்கத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவிகள் அறிந்து கொண்டனர்.

மாணவிகள், பால் சங்கத்தின் தினசரி செயல்பாடுகளை நேரில் பார்த்து, கூட்டுறவு துறையின் நடைமுறை அனுபவத்தை பெற்றனர். இந்த பார்வை பயணம், மாணவிகளின் தொழில் நுட்ப அறிவையும் கிராமப்புற வேளாண் மற்றும் துணைத் தொழில்கள் குறித்த புரிதலையும் மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

ஆவின் கூட்டுறவு பால் சங்கம் மூலம் சிறு மற்றும் குறு பால் உற்பத்தியாளர்கள் பெறும் பொருளாதார ஆதரவு, தினசரி வருமானம் உறுதி செய்யப்படும் விதம், பெண்கள் பால் உற்பத்தி யாளர்களின் பங்கு மற்றும் அவர்களுக்கான சிறப்பு திட்டங்கள் குறித்தும் மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், கூட்டுறவு முறையில் நிர்வாகம் நடைபெறும் விதம், சங்க உறுப்பினர்களின் பொறுப்புகள், கணக்கு பராமரிப்பு முறைகள் மற்றும் அரசு – ஆவின் – பால் உற்பத்தியாளர் இடையிலான ஒருங்கிணைப்பு பற்றியும் மாணவிகள் அறிந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகளான வ.கிருபாலினி, தி.ஜீவிதா, ரா.கவியா, ம.காவ்யா, செ. காயத்திரி, பா.கீர்த்திகா, மு.கிருத்திகா மற்றும் தி.மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்களுடன் நாப்கிசான் வணிக மேலாளர் வணிக திட்டம் குறித்து ஆய்வு





விருதுநகர், ஜன.10

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள சேவையூர் STCPCL - (FPO) இயக்குநர்களுடன் (BOD) சென்னை நபார்டு வங்கியின் தலைமையின் ஒரு அங்கமான நாப்கிசான் (NABKISAN) வணிக வளர்ச்சி மேலாளர் அக்ரி.கிருபாகரன் 9.1.26யன்று அலுவலக கூட்ட அரங்கில் வணிக திட்டம் செயலாக்கம் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். இந்த நிகழ்வில் (FPO) செயல் அலுவலர் பார்த்த சாரதி கலந்து கொண்டு வருகிற நிதியாண்டில் (FPO) மூலமாக செயல்படுத்த பட இருக்கும் வணிக திட்டங்கள் குறித்த விரிவான அறிக்கையை சமர்பித்தவுடன் அதற்கான வாய்ப்புகள் மற்றும் இத்திட்டங்களை செயல்படுத்துவதால் எப்படி FPO வளர்ச்சியடைய முடியும் என்பதை விரிவாக கூறினார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அக்ரி அட்வைசர் சந்திரசேகரன், அக்ரி கிளினிக்-ன் செயல்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறியது மட்டுமல்லாது (CUSTOM HEARING CENTRE) மூலமாக விதைக்கும் கருவிகள் களை யெடுக்கும் கருவிகள் தெளிப்பான்கள் குறைந்த வாடகையில் விவசாயிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுவதாக தெரிவித்தார். இயற்கை உரங்கள், உயிரியல் கட்டுபாட்டு காரணிகள் இவை அனைத்தும் கிடைப்பதாகவும் இயற்கை விவசாயத்தை (ORGANIC FARMING) விவசாயிகளிடம் பிரபலப்படுத்தி நஞ்சில்லா விளைப் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செயல்படுத்தப் படுவதாக கூறினார்.

FPO-வின் அனைத்து செயல்பாடுகளையும் (கிராமிய அங்காடி, இடுபொருள் விற்பனை மையம், நர்சரி, விவசாய கருவிகள் வாடகை மையம்) நாப்கிசான் வணிக வளர்ச்சி மேலாளர் கிருபாகரன் பார்வையிட்டு, செயல்படும் விதம் குறித்து கேட்டறிந்தார். STCPCL இயக்குநர்கள் (BOARD OF DIRECTORS) கணேசன், வசந்தி, புஷ்பம், பாக்கியலட்சுமி, பெரியகருப்பன் உட்பட கலந்து கொண்டு இந்த பகுதி வறட்சி பகுதி மழையை எதிர்பார்த்து தான் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

சில சமயங்களில் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுகிறது. எனவே எங்களுக்கு குறைந்த வட்டியில் நிதி உதவி செய்தால் எங்களுடைய வாழ்வாதாரமும் இந்த (FPO) வளர்ச்சியும் முன்னேறும் என்று கூறினார்கள். கடந்த ஆண்டில் மாவட்ட அளவில் சிறந்த (FPO) வாக தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் கடந்த குடியரசு தினத்தில் பாராட்டு நற்சான்று வழங்கப்பட்டதாக தெரிவித்தனர்.

நாஸ்காம் சார்பாக இரண்டு நாட்கள் பயிற்சியாக கல்யாணிபுரம், தேனூர், குறவை குளம், கல்வி மடை ஏழுவணி பிள்ளையார் குளம் (FPO) மகளிருக்கான பயிற்சியை பயிற்சியாளர் கிருஷ்ணகுமாரி நடத்தினார். மத்திய மாநில அரசின் நல திட்டங்களை எப்படி பயன்படுத்துவது குறித்து பயிற்சி வழங்கினார்.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை களப்பணியாளர்கள் வெற்றிச் செல்வி, மாரீஸ்வரி, விற்பனை பிரதிநிதி அய்யப்ப பாண்டி, கணக் காளர் மாரீஸ்வரி ஆகியோர் சிறப்பாக செய்தனர்.

# நிலக்கடலை பயிர் மேலாண்மையைக் குறித்து பண்ணைப்பள்ளி நடந்தது



ஈரோடு, ஜன.10

ஈரோடு மாவட்டம், நம்பியூர் பேரூராட்சியின் வேளாண் அலுவலர் உமா மகேஸ் தலைமையில் விவசாயிகளுக்கான 'பண்ணைப் பள்ளி' வாரந்தோறும் நடைபெற்று வருகிறது. தற்போது, நிலக்கடலை பயிர் மேலாண்மையைக் குறித்து விளக்கங்கள் அளித்து வருகின்றனர். மண் மாதிரி சேகரித்தல், விதை நேர்த்தி, உரம் தேர்ந்தெடுத்தல் போன்ற தலைப்புகளில் வகுப்புகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. வேளாண் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நான்காம் ஆண்டு இளங்கலை பயிலும் மாணவிகள் ஈரோடு மாவட்டம், நம்பியூர் பேரூராட்சியில் தங்கி ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களும் பண்ணைப் பள்ளியில் விவசாயிகள் உடன் இணைந்து பயிற்சி பெற்றனர். அத்துடன் ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு, வேளாண் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்டது.

# NMV பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா நடந்தது



விருதுநகர், ஜன.10

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரம், முத்துராம லிங்காபுரத்தில் அமைந்துள்ள NMV பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி தொழில்நுட்ப நிறுவனம் (IART), 08.01.26ல் பொங்கல் விழா பாரம்பரிய முறையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 10 மணியளவில் அலங்கார மீன் குளம் திறப்பு, பாரம்பரிய பொங்கல் நிகழ்ச்சி மற்றும் கந்தன் குடில் அமைத்தல் ஆகிய நிகழ்வு களுடன் விழா தொடங்கியது. விழாவிற்கு வேளாண் புள்ளியியல் துறை பேராசிரியர் டாக்டர் எம்.வைதேகி வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து NMV பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் கே.ஆர்.சுந்தரவரதராஜன் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார். பின்னர் இலங்கையின் UVA வெல்லாசா பல்கலைக்கழகத்தின் ஏற்றுமதி வேளாண்மை துறை தலைவர் டாக்டர் எம்.கே.எஸ்.எல்.டி. அமரதுங்கா புதுமையான வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். மாணவர்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகளுடன் விழா களைகட்டியது. விழாவின் இறுதியில் வேளாண்மை துறை பேராசிரியர் டாக்டர் ஆர். ராஜலட்சுமி நன்றி உரை வழங்கினார்.

# கத்திரிக்காய் விவசாயியின் வயலை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.10

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் கிராமத்தில் உள்ள கத்திரிக்காய் விவசாயியின் வயலை பிஜிபி வேளாண் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் நேரில் பார்வையிட்டனர். இப்பார்வையில் மாணவர்கள் சௌந்தர், ஸ்ரீ குரு, திருநாவுக்கரசு, திலக் குமார், வெங்கடேஷ், விஜய், விஷ்ணு மற்றும் யக்னேஷ் குமார் ஆகியோர் பங்கேற்றனர். இந்த வயல் பார்வையின் போது கத்திரிக்காய் பயிரில் காணப்படும் பூச்சி மற்றும் நோய் தாக்கங்கள், உர மேலாண்மை, நீர்ப்பாசன முறைகள் மற்றும் மகசூல் உயர்த்தும் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயியுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிராம வளர்ச்சிக்கான PRA மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.10

திருச்சி மாவட்டம், துறையூர் அருகே உள்ள வெங்கடேசபுரம் கிராமத்தில் தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வேளாண் புல மாணவர்கள், கிராம மக்களுடன் இணைந்து PRA (Participatory Rural Appraisal - ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு) தொடர்பான கிராம வளர்ச்சி மதிப்பீட்டு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். இந்த PRA செயல்பாடு மூலம் கிராமப்புற மக்களின் தேவைகள், வளங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து நேரடியாக மக்களுடன் கலந்துரையாடி அறிந்து கொள்ளப்பட்டது. PRA என்பது வளர்ச்சித் திட்டங்களை கிராம மக்களுடன் இணைந்து உருவாக்கப் பயன்படும் ஒரு முக்கியமான முறை என்பதையும் மாணவர்கள் விளக்கினர். நிகழ்ச்சியின் போது கிராமத்தின் அடிப்படை வசதிகள், விவசாயத்தில் உள்ள சவால்கள், குடிநீர் வசதி, சுகாதாரம், கல்வி நிலை, வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து கிராம மக்களிடம் இருந்து கருத்துகள் சேகரிக்கப்பட்டன. வரைபடம் வரைதல், குழு கலந்துரையாடல், நேரடி நேர்காணல் போன்ற PRA முறைகள் மூலம் தகவல்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டு தங்களது தேவைகள் மற்றும் குறைகளை வெளிப்படுத்தினர். சேகரிக்கப்பட்ட தகவல் களின் அடிப்படையில் எதிர்காலத்தில் கிராம வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க முடியும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் சமூக சேவை உணர்வை கிராம மக்கள் பாராட்டியதுடன், இதுபோன்ற PRA விழிப்புணர்வு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

# 3G கரைசல் குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்த வேளாண்மை கல்லூரி மாணவிகள்




ஈரோடு, ஜன.10

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரம், வரதநல்லூர் பகுதியில், வானவராயர் வேளாண்மை கல்லூரி மாணவிகள் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 3ஜூ கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கப் பயிற்சி அளித்தனர்.

3G கரைசல் என்பது இஞ்சி (Ginger), பூண்டு (Garlic), பச்சை மிளகாய் (Green chilli) ஆகிய மூன்று பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இயற்கை கரைசல் ஆகும். இக்கரைசல் பயிர்களில் ஏற்படும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் (aphis, thrips, whitefly போன்றவை) தாக்கத்தை கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. இரசாயன பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான மற்றும் குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய முறையாக இது விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், 3G கரைசல் தயாரிக்கும் முறை, தெளிக்கும் அளவு, பயன்பாட்டு காலம் மற்றும் அதன் பயன்கள் குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். இதன் மூலம் இயற்கை வேளாண்மை முறைகளை பின்பற்றவும், பூச்சி மேலாண்மையில் இரசாயன பயன்பாட்டை குறைக்கவும் விவசாயிகள் ஊக்கமடைந்தனர்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# வேளாண் கல்லூரி மாணவர்கள் வேளாண் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர்களிடம் கலந்துரையாடல்





நாமக்கல், ஜன.10

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி மாணவர்கள் எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் ஜெயமாலா, தோட்டக்கலை உதவி இயக்குநர் வித்யா மற்றும் தோட்டக்கலை அலுவலர் எழிலரசி ஆகியோரை சந்தித்து அலுவலகத்தின் அமைப்பியல் கட்டமைப்பு, நிர்வாக நடைமுறைகள் மற்றும் தினசரி செயல்பாடுகள் குறித்து விரிவாக அறிந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை மானியம், உர மானியம், பயிர் காப்பீடு, இயந்திரங்கள் வாடகை மையம், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு திட்டங்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தனர். மேலும், இந்த அலுவலக வருகையின் மூலம், மாணவர்கள் அரசு வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையின் செயல்பாடுகள், விவசாயி களுடன் நேரடி தொடர்பு, திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் ஆகியவற்றை தெளிவாக தெரிந்து கொண்டனர். இது அவர் களுடைய எதிர்கால தொழில்முனைவு மற்றும் விரிவாக்கப் பணி களுக்கு மிகுந்த பயனளிக்கும் அனுபவமாக அமைந்தது.

# மண்பரிசோதனை நிலையத்தின் செயல்பாடுகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.10

திருச்சி மாவட்டம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஹரிநந்தனா, பெனாசீர்.சா, ரிசா, சாருமதி, செரின் செண்பகம், சிவப்பிரியா, சினேகவள்ளி, சுகந்தி, சுஜா வர்ஷினி, சுவேதா, சுரேகா, வர்சா, வசந்த ஸ்ரீ, யாஷிகா, யோகவர்ஷினி, யுவ ஸ்ரீ.தி, யுவஸ்ரீ.ந ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ

திட்டத்தின் கீழ் கிராமங்களில் தங்கி உழவர் பெருமக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய சாகுபடி அனுபவ முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டம், மன்னார்புரத்தில் அமைந்துள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கு சென்றனர். அங்கு நாகராஜன், மண் மாதிரிகள் எடுத்தல், மண் பரிசோதனையின் பயன்கள், நுண்ணூட்ட ஆய்வு மாதிரிகள் எடுத்தல் மற்றும் பாசன நீர் மாதிரி எடுத்தல் ஆகியவற்றை பற்றி எடுத்துரைத்தார். மேலும் அவர் பிரச்சனைக்குரிய மண், களர் மண்ணின் தன்மையை பற்றியும் அதன் சீர்திருத்த முறைகளை பற்றியும் விளக்கினார். அவர் தமிழ் மண் வளம் என்னும் செயலி பற்றியும் கூறினார்.



# அரசு சாரா தொண்டு நிறுவனத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.10

நாமக்கல் வட்டத்தில் உள்ள போதுபட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் கேர் டிரஸ்ட் அமைப்பை நாமக்கல் பிஜிபி வேளாண் கல்லூரி மாணவிகள் கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பார்வையிட்டனர். இந்த அமைப்பு 1996 ஆம் ஆண்டு அக்டோபர் 10 அன்று தொடங்கப்பட்டது. இது இந்திய அறக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனம் ஆகும். கிராமப்புற மக்களின் முழுமையான முன்னேற்றமே இதன் முக்கிய நோக்க மாகும். விவசாயிகள் மேம்பாடு மற்றும் கிராமப்புற வாழ்வாதார வளர்ச்சிக்கு இந்நிறுவனம் ஆதரவு வழங்குகிறது. கல்வி மற்றும் எழுத்தறிவு மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீர்வள மேலாண்மைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மருத்துவ முகாம்கள் மற்றும் குடும்ப நல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. சுயதொழில் உருவாக்கும் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பயணம் மாணவிகளுக்கு கிராம வளர்ச்சி குறித்த பயனுள்ள அனுபவத்தை வழங்கியது.

# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.10

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில் துவாக்குடியில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA). அதாவது துவாக்குடியின் வள வரைபடம், நடமாட்ட வரைபடம், பிரச்சினை மரம் மற்றும் தீர்வுகள், பை விளக்கப்படம், மக்கள் தொகை எண்ணிக்கை குறித்து எடுத்துரைத்தனர். இம்முறைகளைப் பயன் படுத்துவதன் மூலம், மாணவர்கள் வெறும் பார்வையாளர்களாக அல்லாமல், கிராம மக்களின் அறிவை மதிக்கும் மற்றும் மேம்பாட்டு திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தும் திறனை வளர்த்துக் கொண்டனர்.

# தயிர் - தாமிர கரைசல் - ஒரு பார்வை

**தயிர் – தாமிர கரைசல்: தழைச்சத்து மற்றும் பூஞ்சை காளான் எதிர்ப்பு குறித்த ஆய்வு தொகுப்பு.**

தயிர் மற்றும் தாமிரக் கம்பிகள் கலந்த கரைசலை வேளாண்மையில் பயன்படுத்துவது குறித்த ஆய்வு முடிவுகள் மற்றும் அதன் அறிவியல் பின்னணி குறித்த விரிவான அலசல் ஆய்வு தகவல்கள்.

**1. அறிவியல் பின்னணி மற்றும் வேதியியல் செயல்பாடு**

தயிரில் உள்ள லாக்டிக் அமிலம் (Lactic Acid) தாமிரத்துடன் (Copper) வினைபுரியும் போது, அது தாமிர லாக்டேட் (Copper Lactate) என்ற கரிம தாமிர உப்பை உருவாக்குகிறது. இந்த வேதிவினையின் காரணமாகவே தயிர் வெள்ளை நிறத்திலிருந்து பச்சை நிறமாக மாறுகிறது.

**காரணி செயல்பாடு**

தாமிர லாக்டேட். இது ஒரு சக்தி வாய்ந்த பூஞ்சை காளான் எதிர்ப்பு (Antifungal) காரணியாகச் செயல்படுகிறது. லாக்டோபேசிலஸ் தயிரில் உள்ள நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் மண்ணின் நுண்ணுயிர் பெருக்கத்திற்கு உதவுகின்றன. அமிலத் தன்மை மண்ணின் pH அளவைச் சீராக்கி, மற்ற ஊட்டச்சத்துக்கள் பயிர்களுக்குக் கிடைப்பதை எளிதாக்குகிறது.

**2. யூரியா (தழைச்சத்து) பயன்பாட்டைக் குறைத்தல்**

யூரியா என்பது 46% நைட்ரஜனை நேரடியாக வழங்கும் ஒரு வேதி உரம். தயிர் கரைசலில் யூரியாவிற்கு இணையான நைட்ரஜன் அளவு இல்லை. இருப்பினும், இது கீழ்க்கண்ட வழிகளில் யூரியாவின் தேவையைக் குறைக்க உதவுகிறது.

**ஊட்டச்சத்து உறிஞ்சுதல்**

தாமிர லாக்டேட் பயிர்களின் வேர் மண்டலத்தைத் தூண்டி, மண்ணில் ஏற்கனவே உள்ள தழைச்சத்தை (ஹிஷ்மிஷெலிஆளஜ) திறம்பட உறிஞ்ச உதவுகிறது.

**நோய் எதிர்ப்பு சக்தி**

பயிர்கள் பூஞ்சை நோய்களிலிருந்து பாதுகாக்கப்படுவதால், அவை ஆரோக்கியமாக வளர்ந்து குறைந்த உரத்திலேயே அதிக மகசூலைத் தருகின்றன.

**நுண்ணுயிர் செயல்பாடு**

தயிரில் உள்ள கரிமப் பொருட்கள் மண்ணில் உள்ள நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியாக்களுக்கு உணவாகி, இயற்கையான தழைச்சத்து உற்பத்தியை அதிகரிக்கின்றன.

**3. ஆய்வு முடிவுகள் மற்றும் விவசாயிகளின் அனுபவம்**

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தினேஷ்குமார் போன்ற முன்னோடி விவசாயிகள் மற்றும் சுமார் 90,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

‘2 கிலோ தயிர் மற்றும் தாமிரக் கம்பி கலந்த கரைசல், சுமார் 25 கிலோ யூரியா வழங்கும் வளர்ச்சியைப் பயிர்களுக்கு வழங்குகிறது. இது விவசாயிகளின் கள அனுபவ ஆய்வு முடிவாகும்.

வேளாண் அறிவியல் நிலையங்கள் (KVK) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) போன்ற அமைப்புகள் இது குறித்துத் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. இது ஒரு முழுமையான உரத்தை விட, ஒரு சிறந்த வளர்ச்சி ஊக்கி (Growth Promoter) மற்றும் உயிரி பூஞ்சை கொல்லி (Bio- fungicide) என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**4. பயன்பாட்டு முறை (பரிந்துரைக்கப்படுவது)**

**1. தயாரிப்பு :** 2 முதல் 2.5 லிட்டர் தயிரில் ஒரு தாமிரக் கம்பி அல்லது கரண்டியைப் போட்டு 10 முதல் 15 நாட்கள் நிழலில் ஊற வைக்கவும்.

**2. அடையாளம் :** தயிர் பச்சை நிறமாக மாறியவுடன் தாமிரத்தை எடுத்துவிட்டு, கரைசலை நன்கு கலக்கவும்.

**3. தெளிப்பு :** இந்தக் கரைசலை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பளவில் பயிர்களின் மீது தெளிக்கலாம்.

**முடிவு**

தயிர்–தாமிர கரைசல் என்பது யூரியாவிற்கு ஒரு நேரடி வேதியியல் மாற்று அல்ல, ஆனால் இது ஒரு சிறந்த அறிவியல் பூர்வமான உயிரி மேலாண்மை முறை ஆகும். இது பயிர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலம் யூரியா போன்ற செயற்கை உரங்களின் தேவையைக் கணிசமாகக் குறைக்க உதவுகிறது.

தகவல் : **அக்ரி கோ.சுரேஷ்குமார். மைக்ரோகிரீன் வளர்ப்பு செயல்பாட்டாளர், கோவில்பட்டி. 94436 20932.**

VASANTHAM Agri Tech

# வசந்தம் அக்ரிடெக்

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு,
சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sarathi i06



Yield max VT 260



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும்
சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652